OS: 201/2024

Date: 04.02.2026

பெயர் : பூபாலன் **(பி.வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி எனது சித்தப்பா, பெரியப்பா ஆகியோர்கள் 23.04.2001ம் தேதியன்று பாகம் பிரித்து கொண்டிருக்கிறார்கள் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் தங்களுக்கு பிதுராஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்தை பாகம் பிரித்து கொண்டததாகதான் எழுதியிருக்கிறார்கள் என்றால் பிதுராஜ்ஜித சொத்தல்ல என் அப்பாவின் அப்பா சொத்தை பாகம் பிரித்து கொண்டிருக்கிறார்கள். எனவே அது பிதுராஜ்ஜித சொத்து அல்ல. அந்த ஆவணத்தில் பிதுராஜ்ஜித சொத்து என்று எழுதியிருந்தால் அது தவறா என்றால் ஆமாம்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து என் அப்பாவின் அப்பாவிற்கு பாத்தியப்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி என் அப்பாவிற்கு பி செட்டியூல் சொத்து பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். பி செட்டியூல் சொத்தை நானும், எனது அண்ணன், தம்பிகளும் பாகக்கறார் செய்து கொண்டேமா என்றால் இல்லை.

3. பி செட்டியூலில் கண்ட சொத்தின் ஒரு பகுதியை என் அப்பா என் மகன்களுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் 27 1/2 செண்ட் எழுதிவைத்திருக்கிறார். என் அப்பா எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் என் அப்பா தனக்கு தன் தகப்பனார் மூலம் வந்த சொத்து என்று எழுதாமல் பாகம் பிரிவினையின் மூலம் வந்த சொத்து என்றுதான் எழுதியிருக்கிறார் என்றால் ஆமாம். அண்ணன், தம்பிகள்

சேர்ந்து பாகம் பிரித்ததில் என் அப்பாவிற்கு வந்த சொத்தை எழுதிவைத்திருக்கிறார்.

4. என் அப்பா தான செட்டில்மெண்ட் எழுதிவைக்கும் வரை என்னோடு இருந்தார் என்றால் ஆரம்பத்திலிருந்தே என்னோடு தான் இருந்தார். என் அப்பா இறக்கும்போது மேட்டூரில் எனது அண்ணன் வீட்டில் இருந்தார் என்றால் ஆமாம், இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு ஒருமாதத்திற்கு முன்னர்என் அக்கா மகன்கள் வந்து தூக்கி கொண்டு சென்றுவிட்டார்கள்.

5. என் அப்பாவின் இறுதி சடங்கு என் வீட்டில் நடக்கவில்லை என்றாலும், பொது வீட்டில் வைத்துதான் நடத்தப்பட்டது என்றாலும் ஆமாம். பாகம் பிரியாத பி செட்டியூல் சொத்தை அனைவரும் கூட்டாக அனுபவித்துவருகிறோம் என்றால் இல்லை. என்னுடைய மகன்களுக்கு எழுதி வைத்த சொத்தை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். மற்ற சொத்துக்களை முத்துமாணிக்கம் அனுபவித்து வருகிறார்.

6. என் அப்பா எனது மகன்களுக்கு எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் என்னுடன் பிறந்தவர்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன்கள் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்த காலக்கட்டத்தில் முத்துமாணிக்கம் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்திருந்த வழக்கும் அங்கு விசாரிக்கப்பட்டது என்றால் ஆமாம்.

7. 2001ம் ஆண்டு எனது அப்பா தான செட்டில் மெண்ட் எழுதி வைத்ததால் யாருக்கும் பாகம் இல்லை என்று நான் சொல்வது தவறு என்றாலும் பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்தில் தான செட்டில்மெண்ட எழுதிவைக்க என் அப்பாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. என் தகப்பனாரை இறுதி வரை நானே பார்த்து கொண்டதாலும், எனக்கு அவர் திருமணம் செய்து வைக்கவில்லை

என்பதாலும், அவருடைய பங்கில் எனது மகன்களுக்கு கொஞ்சம் எழுதிவைத்தார் மீதி சொத்துக்களை பொதுவில் விட்டுவிட்டார்.

8. எனது மகன்களுக்கு எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் சொத்து அவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்துக்கள் இல்லை என்றாலும், எனவே எனது அப்பாவிற்கு தான செட்டில்மெண்ட் எழுதிவைக்க உரிமையில்லை என்றாலும், எனவே எனது அப்பா எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் செல்லாது என்றாலும், வா.சாஆ.1 ஆவணத்தின்படி உபயவாதிகள் அனைவருக்கும் தாவா சொத்தில் பங்கு இருக்கிறது என்றாலும் சரியல்ல. என் அப்பா சம்பாதித்த சொத்துக்களை அவர்கள் விற்றுவிட்டு இந்த ஒரு சொத்தையும் கேட்பதாக சாட்சி கேட்கிறார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.